**விகாரி ஆண்டு தை 17ம் 31.01.2020ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும்**

**அப்பொழுது கீழ் கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்னிலை.திரு.என். சங்கரன் பிகாம்,எச்டிசிம்., ஆணையர் மற்றும் தனி அலுவலர்**

பொருள்.1

இந்நகராட்சி ஆணையரின் டிசம்பர் 2019ற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்.2

திருவாரூர் நகராட்சியில் குப்பைகளை அகற்ற பயன்படுத்தும் வாகனம் TN50M0270 டிப்பர் வாகனத்திற்கு புதிய மின்கலம் (NEW BATTERY) பொருத்துவதற்கு விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் 10.01.2020 அன்று கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | A.K.பேட்டரிஸ் சேல்ஸ்&சர்வீஸ், 6M.C.ரமேஷ் காம்ப்ளக்ஸ் மன்னை மெயின் ரோடு, சிங்களாஞ்சேரி(A.R.போலிஸ் கோட்ரஸ் விளமல், திருவாரூர்) | ரூ.13800/- |
| 2 | Day Night Marketing சேல்ஸ்&சர்வீஸ் 173-C நேதாஜி ரோடு திருவாரூர் | ரூ.13000/- |
| 3 | ஜெய் இன்வெட்டர் 154ஏ, நேதாஜி ரோடு ஆர்ச் அருகில் திருவாரூர் | ரூ.13500/- |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள 3 ஒப்பந்தப்புள்ளிகளில்Day Night Marketing சேல்ஸ்&சர்வீஸ் நிறுவனம் (வரிசை எண்-2ல்) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்.3

திருவாரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN501267 டிராக்டர் வாகனத்திற்கு தகுதிசான்று பெற அவ்வாகனத்தில் பழுதி நீக்கப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 07.01.2020 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் நம்பர் 34/59 தஞ்சாவூர் ரோடு திருவாரூர் | ரூ.1,23,000/- |
| 2 | அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13 ராமகே ரோடு திருவாரூர் | ரூ.1,26,850/- |
| 3 | குரு ஆட்டோ கேரேஜ் நம்பர் 34/59 தஞ்சாவூர் ரோடு தஞ்சாவூர் | ரூ.1,30,650/- |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள 3 ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1-ல் உள்ள தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.4563/2019/எச்1

பொருள்.4

திருவாரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN50L2532 காம்பக்டர் வாகனத்திற்கு தகுதி சான்று பெற அவ்வாகனத்தில் பழுதி நீக்கப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி கோரியதில் 07.01.2020 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | அன்னை சத்யா இஞ்சினியர்ஸ் ஒர்க்ஸ்,13.ராமகே ரோடு, திருவாரூர் | ரூ.1,70,038/- |
| 2 | தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் நம்பர் 34/59 தஞ்சாவூர் ரோடு திருவாரூர் | ரூ.1,38,800/- |
| 3 | குரு ஆட்டோ கேரேஜ் நம்பர் 1, ராஜீவ் நகர், நாகை ரோடு, தஞ்சாவூர். | ரூ.1,48,700/- |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள 3 ஒப்பந்தபுள்ளிகளில் தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் (வரிசை எண்.2) நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1988/2019/எச்1

பொருள்.5

திருவாரூர் நகராட்சி பகுதிகளில் மனிதக்கழிவுகளை அகற்றுவோர் தடுப்பு மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013-ன் படி அகற்றப்பட்ட நச்சுதடை தொட்டி கழிவுகளை திறந்தவெளி நீர்நிலை ஆதாரங்கள் போன்றவற்றில் கொட்டுவது தவறு என்பதினால் நகராட்சி வழிகாட்டுதலின்படி நச்சு தடை தொட்டி கழிவுகளை பாதாள சாக்கடை சுத்திகரிப்பு

நிலையத்தில் மட்டுமே கொட்ட வேண்டும் என்பதால் நகராட்சி அதற்கான சேவை கட்டணம் கீழ்கண்ட விவரப்படி நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

1. நடை -1க்கு 4000 லிட்டர் கொண்ட வாகனம் ஒன்றுக்கு -ரூ.200
2. நடை -1க்கு 6000 லிட்டர் கொண்ட வாகனம் ஒன்றுக்கு -ரூ.300

மேலும் நாளிதழில் விளம்பரம் செய்ய தோராய செலவீனம் ரூ.20,000/-க்குமன்ற அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7886/2014/எச்1

பொருள்.6

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கப்பட்ட சாலைகளை சீரமைக்க 14வது மாநில நிதிக்குழு 2019-20ன் கீழ் தேர்வு செய்யப்பட்ட சாலைகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவில் விளம்பரம் செய்யப்பட்டதற்கிணங்க "தினந்தந்தி நாளிதழில்" (09.01.2020) விளம்பரம் செய்யப்பட்டமைக்கான விளம்பரக்கட்டணத் தொகை ரூ.7963/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட விளம்பர கட்டணத்தினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.3666/2019/இ1

பொருள்.7

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரும் சாலையில் பாதாளசாக்கடை மற்றும் மழையினால் பாதிக்கப்பட்ட தார்சாலைகளை மேம்படுத்திட தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2019-20ன்கீழ் ரூ.100.00 இலட்சத்திற்கு 1 சிப்பமாக திட்டபிரேனணை தயார் செய்யப்பட்டதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் செயல்முறை கடிதத்தில் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.16.10.2019 நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 20.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் விலை விகிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

20.11.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டின்படி ஒப்பந்த தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் விபரம் | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | சிப்பம் 1 தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டத்தின் 2019-2020ன் கீழ் திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெருமாள் மட வளாகம், சிவப்பிரகாச மடத்தெரு மற்றும் தென்றல் நகர் முதலிய சாலைகளை தார்சாலையாக அமைக்கும் பணி வார்டு எண் (17,2 மற்றும் 4) | ரூ.8448978.52 | மெர்சஸ்.ஏ.என்.ஆர். சண்முகப்பிரியா கன்ட்ரஸ்ஷன், திருவாரூர் | ரூ.8869021/- | 4.97% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | மெர்சஸ். ஆர்.ஜி.கே, இன்ப்ரா ஸ்ரெக்ச்சர், மன்னார்குடி. | ரூ.9216374/- | 9.08% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழிநுட்ப அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீடு விலை விகிதத்தைவிட கூடுதலாக உள்ளதினால் இப்பணிகளை உடன் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்பதன் அவசியம் கருதி வரப்பெற்றதில் குறைவானதும் மதிப்பீட்டைவிட கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தள்ள மெர்சஸ்.ஏ.என்.ஆர். சண்முகப்பிரியா கன்ட்ரஸ்ஷன், திருவாரூர், ஒப்பந்ததாரரிடம் இவ்வலுவலக ந.க.எண்.3521/2019/இ1 நாள். 24.12.2019ந் தேதிய கடிதத்தில் விலை குறைப்பு சம்மத கடிதம் கோரப்பட்டதில் அன்னாரது விலைக்குறைப்பு சம்மதக்கடிதத்தில் மூலப்பொருட்களின் விலை உயர்வு டீசல் விலை உயர்வு காரணமாக வாகன வாடகை விலை உயர்வு பணியாளர்களின் ஊதிய உயர்வு மேற்கண்ட காரணங்களால் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதனை தொடர்ந்து மெர்சஸ்.ஏ.என்.ஆர்.சண்முகப்பிரியா கண்ட்ரஸ்ஷன், திருவாரூர், ஒப்பந்ததாரால் வழங்கப்பட்ட அதே மதிப்பீட்டின் விலை விகிதத்திலேயே வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மெர்சஸ்.ஏ.என்.ஆர்.சண்முகப்பிரியா கன்ட்ரஸ்ஷன், திருவாரூர் நிறுவனத்தின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.
2. 2019-20 SORன்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் குறைவானதும், வழங்கப்பட்ட விலைக்குறைப்பு சம்மதக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விளக்கத்தினை ஏற்கவும், பின்னர் மதிப்பீட்டினைவிட கூடுதலாக பெறப்பட்ட விலைவிகிதத்தினை அளித்துள்ள மெர்சஸ்.ஏ.என்.ஆர்.சண்முகப்பிரியா கன்ட்ரஸ்ஷன், திருவாரூர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3. நகராட்சி பொறியியல் கையேடு தொகுதி(1) பகுதி 2 பிரிவு 2.7.2ன்படி பணியின் முக்கியத்துவம் கருதி மதிப்பீட்டினைவிட 5 சதவீதம் வரை கூடுதலாக அனுமதிப்பது தொடர்பாக மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மன்றம் இறுதி முடிவு எடுக்கலாம்.

ந.க.எண்.3521/2019/இ1

பொருள்.8

குடியரசு தின விழா 2020னை முன்னிட்டு திருவாரூர் நகராட்சியின் சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் விழா நடைபெறும் மைதானத்தை சுத்தப்படுத்தல் தேவையான பொதுமக்கள் தொடர்பு மையம் ஏற்படுத்துதல், குடிநீர் மற்றும் தற்காலிக கழிவறை அமைத்தல் தொடர்பான எற்பாடுகளை செய்தல் குறித்து அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து விழா நடைபெறும் மைதானத்தில் தற்காலிக கழிவறைகள் மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 23.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ளது. அதன்விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | மதிப்பீடு | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ். தணிகாசலம், ஒப்பந்ததாரர்.திருவாரூர் | ரூ.79532.40 | 0.38% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி.எம். தேன்மொழி ஒப்பந்ததாரர் .திருவாரூர். | | 0.27% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.தணிகாசலம் ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.0036/2020/இ1

பொருள்.9

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான நெய்விளக்கு தோப்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு செய்யும் பணியினை மேற்கொள்ள இந்நகர் மன்றத்தீர்மானம் எண்.77 நாள். 31.07.2019ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதனை தொடர்ந்து 23.01.2020ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.இப்பணிக்கு கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு,.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | மதிப்பீடு | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ். தணிகாசலம், ஒப்பந்ததாரர்.திருவாரூர் | ரூ.108500/- | 0.30% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எஸ். ரெங்கசாமி ஒப்பந்ததாரர் திருவாரூர். | | 0.20% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்து "திரு.எஸ்.தணிகாசலம்" ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்.10

திருவாரூர் நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் பிறப்பு இறப்பு சான்றுகள் வழங்கிட புதியதாக கலர் பிரின்டர் 1 எண்ணிக்கையும் மற்றும் எதிர்வரும் உள்ளாட்சித்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுக்களை ஸ்கேன் செய்வதற்கு ஸ்கேனர்-1 எண்ணிக்கையும் விநியோகம் செய்ய 28.01.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| S. No | Suppliers | Printed (HP Inkjet GT319 All in One) | Scanner (Cannon) | Total Cost Rs. |
|---|---|---|---|---|
| 1 | M/S. Mass Tech Computers, Tiruvarur | Rs.9950/- | Rs.4350/- | Rs.14300/- |
| 2 | M/S. Annai Computers, Tiruvarur | Rs.10950/- | Rs.4450/- | Rs.15400/- |
| 3 | M/S. JP Copier & Systems, Tiruvarur | Rs.10800/- | Rs.4650/- | Rs.15450/- |

மேற்கண்ட நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி வழங்கப்பட்ட "மெர்சஸ் மாஸ்டெக் கம்ப்யூட்டர் திருவாரூர்" அவர்களின் குறைவாக அளிக்கப்பட்ட விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள "மெர்சஸ் மாஸ்டெக் கம்ப்யூட்டர் திருவாரூர்" அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.503/2019/இ1

பொருள்.11

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்தில் "பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-20ன் கீழ்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவாரூர் அவர்களின் செயலாணை கடிதம் ந.க.எண்.3279/2019/அ5 நாள்.23.01.2020ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. ந.க.எண்.441/2019/இ1

பொருள்.12

திருவாரூர் நகராட்சி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் 162 இந்தியா மார்க் 11 Hand Pump 168 எண்ணிக்கையிலான ஆழ்துளை கிணறுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அம்மையப்பன் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து திருவாரூர் மடப்புரம் நீர்த்தேக்கத் தொட்டி 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு பிரதான குழாய் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகரின் ஐ.பி.கோவில், தென்றல் நகர், கிடாரங்கொண்டான் பகுதிநீரேற்றும் நிலையங்கள் மூலம் ஆங்காங்கே ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்நகரில் மொத்தம் 74 கிலோ மீட்டர் பகிர்மான குழாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவ்வபொழுது ஏற்படும் குடிநீர் குழாய் பழுது சரிசெய்யவும் ஆழ்துளை கிணறு மினிபவர் பம்பு அவ்வபொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்து நகராட்சிக்கு 30 வார்டு மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் சீராக வழங்கவும் தயார் செய்யப்பட்டு ரூ.9.80 இலட்சத்திற்கு மதிப்பீட்டிலான மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.13

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 2020-2021ம் நிதியாண்டிற்கு மேற்கொள்ளப்படவுள்ள செலவினங்களுக்கு கீழ்கண்ட விபரபடி நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களுக்கு தகுதி சான்று, இன்சூரன்ஸ், சில்லரை பழுதுகள் போன்றவற்றிக்கான செலவினம். | 80.00லட்சம் |
| 2 | திடக்கழிவு மேலாண்மை Primary Collection பணியில் ஈடுபடுத்தப்படும் Tricycle Push Cart காம்பாக்டர் பின் பழுது நீக்கம் பராமரிப்பு செலவினம். | 10.00லட்சம் |
| 3 | கொசு புழு தடுப்பு முதிர் கொசு தடுப்பு பணிகள் கொசு புழு தடுப்பு மருத்துகள், புகை தெளிப்பான் வாங்குதல் கை தெளிப்பான் பராமரிப்பு பழுது நீக்கம் போன்றவை செலவினம் | 30.00லட்சம் |
| 4 | நீர்த்த சுண்ணாம்பு ப்ளீச்சிங் பவுடர், கிருமி நாசினி, தொற்று நீக்கிமருந்துகள் வாங்கிட செலவினம். | 30.00லட்சம் |
| 5 | திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருள் செலவினம் செய்தல். | 60.00லட்சம் |
| 6 | பொதுசுகாதாரப்பணியாளர்களுக்கு தளவாடச்சாமான்கள், பாதுகாப்பு மற்றும் உபகரணங்கள், வாங்கிட செலவினம் | 1.5.00லட்சம் |
| 7 | தொற்றுநோய்கள் பரவும் போது நோயினை கட்டுப்படுத்த கருவிகள், மருந்துகள், விழிப்புணர்வு பணிகள் பணியாளர்களை தற்காலிகமாக அமர்த்துதல், அறிக்கை தொகுப்புகள், புகைப்படம் எடுத்தல் போன்ற பணிகளுக்கு செலவினம். | 30.00லட்சம் |
| 8 | துப்புரவு பணியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள் பாதுகாப்பு மற்றும் உபகரணங்கள் | 10.00லட்சம் |
| 9 | சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு மற்றும் முகாம் நடத்துதல் சில்லரை செலவினம். | 5.00லட்சம் |

| | | |
|---|---|---|
| 10 | டெங்கு தடுப்பு பணிக்காக தற்காலிக பணியாளர்களை பணியமர்த்துதல் | 50.00லட்சம் |
| 11 | இயற்கை இடர்பாடு காலங்களில் தேவைபடும் அத்தியாவசிய தளவாடச்சாமான்கள், உபகரணங்கள், பணியாளர்களை தற்காலிகமாக அமர்த்துதல் வாகனங்களுக்கு எரிபொருள் மற்றும் வாடகை இயந்திரங்கள் போன்றவற்றிக்கு செலவினம் | 25.00லட்சம் |
| 12 | தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தல் மற்றும் பிடித்து அப்புறப்படுத்தும் பணிகளுக்கு செலவினம் | 6.00லட்சம் |
| 13 | நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் நெய்விளக்கு தோப்பு உரக்கிடங்கில் உரம் தயாரிப்பு பணிகள் மேற்கொள்ள செலவினம் | 10.00லட்சம் |
| 14 | அ/மி தியாகராஜர் தேர் திருவிழா காலங்களில் பொது சுகாதார பணி மேற்கொள்ள தற்காலிக பணியாளர்கள் அமர்த்துதல், கிருமி நாசினி, பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட சாமான்கள் வாங்குதல், பணிகளுக்கு செலவினம். | 10.00லட்சம் |
| 15 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு, விழிப்புணர்வு நோட்டீஸ், நாளிதழ் விளம்பரம் மற்றும் தெருமுணை பிரச்சாரங்கள் போன்ற பணிகளுக்கு செலவினம் | 15.00லட்சம் |
| 16 | பொது சுகாதாரம் குறித்த நாளேடுகளில் வரி விளம்பரங்கள் செய்வதற்கு செலவினம் | 15.00லட்சம் |
| 17 | தற்காலிக பணியாளர்கள் அமர்த்துதல் திடக்கழிவு மேலாண்மை Out Sourcing முறையில் பணி அமர்த்துதல் போன்றவற்றிற்கு செலவினம் | 200.00லட்சம் |
| 18 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு புதிதாக வாகனங்கள் வாங்குதல் செலவினம் | 25.00லட்சம் |
| 19 | பிறப்பு, இறப்பு பதிவேடு பைண்டிங் செலவினம் | 1.00லட்சம் |
| 20 | உரக்கிடங்கு பராமரிப்பு மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு செலவினம் | 15.00லட்சம் |
| 21 | Stay Animals (Cow and Pig) பிடித்து அப்புறப்படுத்திட செலவினம். | 2.00லட்சம் |

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள்.14

திருவாரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN50E2361 மின்வாரிக்கு தகுதி சான்று பெற அவ்வாகனத்தில் பழுதுநீக்கப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.01.2020 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் நம்பர் 34/59 தஞ்சாவூர் ரோடு திருவாரூர் | ரூ.1,18,590/- |
| 2 | அன்னை சத்யா இஞ்சினியர்ஸ் ஒர்க்ஸ்,13.ராமகே ரோடு, திருவாரூர் | ரூ.1,18,236/- |
| 3 | குரு ஆட்டோ கேரேஜ் நம்பர் 1, ராஜீவ் நகர், நாகை ரோடு, தஞ்சாவூர். | ரூ.1,19,298/- |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2-ல் உள்ள அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக உள்ளதால் அதனை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1988/2019/எச்1

பொருள்.15

**சாலையோரவியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2019**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழஙகப்பட்டுள்ள அதிகாரஙகள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுஙகுமுறை மற்றும் உரிமம் வழஙகுதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் திருவாரூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2020 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழஙகப்பட்டுள்ள அதிகாரஙகளின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தஙகளுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுஙகுப்படுத்தவும், திருவாரூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2020 ஏற்படுத்தப்படுகின்றது.

**அத்தியாயம்–1**

**முதனிலை**

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் திருவாரூர்நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) துணை விதிகள், 2020 என்றழைக்கப்படும்.

   (2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

   **(i)**"சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

   **(ii)**"விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

   **(iii)**"விதிகள்" என்பதுதமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

   **(iV)**"திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுஙகுமுறை மற்றும் உரிமம் வழஙகுதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

(V)"நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

3.(1) பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall)மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலஙகளை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து திருவாரூர் நகராட்சியால் அஙகீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிபார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரஙகளைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலஙகளை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனஙகள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4)சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களின்,

(i) அரசு கட்டிடங்கள், நீதிமன்றஙகள்நகராட்சி அலுவலகஙகள், தீயணைப்பு நிலையஙகள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையஙகளின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கஙகளிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையஙகளின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னஙகள் மற்றும் தொல்பொருளியல் தளஙகள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடஙகளில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடஙகளில் அனைத்து பக்கஙகளில் 30 மீட்டர் நீளத்திற்கு

(Viii) ‘எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்

வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடஙகளில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அஙகாடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அஙகாடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

3. **சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடஙகல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடஙகல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழஙகல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடஙகல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள், நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடஙகல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3

## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோரவியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1800/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.3600/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ.5400/–க்கு குறையாமல் |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1000/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1800/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.2800/–க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1800/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.3600/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.5400/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1000/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1800/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.2800/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.500/– |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்படும்.

**7. பராமரிப்பு கட்டணம்,– (1)** சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு 100/–க்கு குறையாமலும், ரூ. 300/–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,

மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடஙகாக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்– 4

### பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுஙகுமுறை படுத்துதல்.–(1)** நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலஙகளில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனஙகள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அஙகீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழஙகப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுஙகுபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழஙகப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலஙகளில் குடிமை சேவைகளை ஒழுஙகுப்படுத்துதல்,– (1)** விற்பனை மண்டலஙகளில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும்சாதனஙகள் உபயோக படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலஙகளில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழஙகக் கூடாது.

(5)மின்சார கம்பஙகளிலிருந்து முறையற்ற மின்உபயோகத்தை தடுக்கப்படும்.

மேற்கண்டவாறு திருவாரூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகளுக்கான துணை விதிகள் 2020க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. சாலையோர வியாபாரிகளுக்கான துணை விதிகளுக்கு ஆட்சேபனைகள் கோரி நாளிதழில் விளம்பரம் செய்து ஆட்சேபனைகளின் பெயரில் ஒப்புதல் வழங்கலாம்.
2. நாளிதழ்களில் விளம்பரம் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.10,000த்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

பொருள்.16

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட மடப்புரம் சபாபதி முதலியார் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் சத்துணவு மையத்தினை பராமரிப்பு செய்திடவும், பள்ளியின் பின்புறமுள்ள கழிப்பறையை சுற்றி மதில்சுவர் மற்றும் கழிவறை பராமரிப்பு செய்து குடிநீர் வசதி செய்திட ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.102/2019/இ1

பொருள்.17

திருவாரூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள மடப்புரம் சபாபதி முதலியார் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் அபாயகரமான நிலையில் உள்ள பழுதடைந்த பள்ளியின் முன்புறம் மதில் சுவற்றை இடித்துவிட்டு புதியதாக மாற்றி அமைக்கவும் மற்றும் முதல்தள வகுப்பறை கட்டிடத்திற்கு தடுப்பு சுவர் மற்றும் மின்விளக்கு அமைத்தல் மற்றும் வர்ணம் பூச ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.102/2019/இ1

பொருள்.18

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரும் சாலையில் பாதாள சாக்கடை மற்றும் இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கப்பட்ட தார் சாலைகளை புணரமைப்பு செய்வதற்கு 14வது மத்திய நிதிக்குழு மானியம் 2019-20ன் கீழ் 50விழுக்காடு தொகையாக ரூ.188.51 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில்

இயற்கை இடர்பாடுகளினால் தற்பொழுது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கீழ்கண்ட சாலைகள் தேர்வு செய்து உரிய மதிப்பீட்டில் தொகை ரூ.197.00 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.133, நாள்.31.12.2019ன்படி நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து 28.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் விலை விகிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

28.01.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டின் படி ஒப்பந்த தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் விபரம் | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | மதிப்பீடு சதவீத விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | சன்னதி தெரு, நடவாகன் மற்றும் விட்டல வாசல் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி (வார்டு எண்-14,13) | 25.00 | மெர்சஸ்.ஆர்.ஜி.கே. இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2237460/- | 5.29% அதிகம் |
| | | | ஸ்ரீ இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2230434/- | 4.96% அதிகம் |
| 2 | சம்பந்த மூர்த்தி பிள்ளையார் கோவில் தெரு மற்றும் வடக்கு மட வளாகம் தார் சாலை அமைக்கும் பணி (வார்டு எண்-4,13) | 25.00 | மெர்சஸ்.ஆர்.ஜி.கே. இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2323540/- | 5.28% அதிகம் |
| | | | ஸ்ரீ இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.23116443/- | 4.96% அதிகம் |
| 3 | சபாபதி தெரு மற்றும் பெருமாள் சன்னதி தெருவில் தார்சாலை அமைக்கும் பணி (வார்டு எண்.18,17) | 25.00 | மெர்சஸ்.ஆர்.ஜி.கே. இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2288860/- | 5.27% அதிகம் |
| | | | ஸ்ரீ இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2282052/- | 4.96% அதிகம் |
| 4 | இராணுவ நகரில் தார் சாலை அமைக்கு பணி | 25.00 | மெர்சஸ்.ஆர்.ஜி.கே. இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2322000/- | 6.50% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (வார்டு எண்-21) | | ஸ்ரீ இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2270802/- | 4.15% அதிகம் |
| 5 | அரசன் குளத்தெரு மற்றும் கம்பர் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி (வார்டு எண்-5,4) | 25.00 | மெர்சஸ்.ஆர்.ஜி.கே. இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2313350/- | 6.39% அதிகம் |
| | | | ஸ்ரீ இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2262421/- | 4.05% அதிகம் |
| 6 | திருமஞ்சன வீதி தார் சாலை அமைக்கும் பணி (வார்டு எண்-15) | 25.00 | மெர்சஸ்.ஆர்.ஜி.கே. இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2270480/- | 5.28% அதிகம் |
| | | | ஸ்ரீ இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2263625/- | 4.96% அதிகம் |
| 7 | திருமஞ்சன வீதி (தெற்கு கோபுர வாசல்) மற்றும் மானந்தியார் தெரு தார் சாலை அமைக்கும் பணி (வார்டு எண்-14) | 25.00 | மெர்சஸ்.ஆர்.ஜி.கே. இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2011042/- | 5.27% அதிகம் |
| | | | ஸ்ரீ இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.1985286/- | 3.83% அதிகம் |
| 8 | சூபி நகர் மற்றும் அப்பர் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி ( வார்டு எண்.9.12) | 25.00 | மெர்சஸ்.ஆர்.ஜி.கே. இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2279900/- | 5.21% அதிகம் |
| | | | ஸ்ரீ இன்ப்ராஸ்ரெக்சர்ஸ், மன்னார்குடி | ரூ.2254778/- | 4.05% அதிகம் |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட கூடுதலாக உள்ளதினால் இப்பணிகளை உடன் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்பதன் அவசியம் கருதி வரப்பெற்றதில் குறைவானதும் மதிப்பீட்டைவிட கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெர்சஸ்.ஸ்ரீ.கன்ட்ரஸ்ஷன், மன்னார்குடி, ஒப்பந்ததாரரிடம் இவ்வலுவலக ந.க.எண்.3666/2019/இ1 நாள்.31.01.2020ந்தேதிய கடிதத்தில் விலை குறைப்பு சம்மத கடிதம் கோரப்பட்டதில் அன்னாரது கடிதத்தில் மூலப்பொருட்களின் விலை உயர்வு டீசல் விலை உயர்வு காரணமாக வாகன வாடகை விலை உயர்வு பணியாளர்களின் உதிய உயர்வு மேற்கண்ட காரணங்களால் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதனை தொடர்ந்து மெர்சஸ்.ஸ்ரீ.கன்ட்ரஸ்ஷன், மன்னார்குடி, ஒப்பந்ததாரால் வழங்கப்பட்ட அதே மதிப்பீட்டின் விலை விகிதத்திலேயே வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மெர்சஸ்.ஸ்ரீ.கன்ட்ரஸ்ஷன், மன்னார்குடி, நிறுவனத்தின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.
2. 2019-20 SORன்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் குறைவானதும், வழங்கப்பட்ட விலை குறைப்பு சம்மதக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விளக்கத்தினை ஏற்கவும், பின்னர் மதிப்பீட்டினைவிட கூடுதலாக பெறப்பட்ட விலைவிகிதத்தினை வரிசை எண் 1 முதல் 8 வரை பணிக்கு அளித்துள்ள மெர்சஸ்.ஸ்ரீ.கன்ட்ரஸ்ஷன், மன்னார்குடி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3. நகராட்சி பொறியியல் கையேடு தொகுதி (1) பகுதி 2 பிரிவு 2.7.2ன்படி பணியின் முக்கியத்துவம் கருதி மதிப்பீட்டினைவிட 5 சதவீதம் வரை கூடுதலாக அனுமதிப்பது தொடர்பாக மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3666/2019/இ1

இடம் : திருவாரூர்
நாள் : **31.01.2020**

**ஒம்/- ந.சங்கரன்,**
**ஆணையர்/தனி அலுவலர்,**
**திருவாரூர் நகராட்சி.**